# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் 05.06.2025**

**முன்னிலை**

**திரு முகம்மது ஷகீல் அ்தர், இகாப (ஓய்வு)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 18647/SCIC/2023**

திரு V. பாஸ்கர் — மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்), --- பொது அதிகார அமைப்பு
மாவட்டபதிவாளர் அலுவலகம்,
சிதம்பரம்.

## ஆணை

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ், 12.06.2023 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட பதிவாளர் அலுவலகம், சிதம்பரம் என்ற முகவரிக்கு அனுப்பிய மனுவில். 2021ம் ஆண்டு முதல் தற்போது வரையில் மோசடி ஆவண பதிவுகள் குறித்து தங்கள் அலுவலகத்தில் பெறப்பட்ட மனுக்களின் விவரம், நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட மனுக்களின் விவரம், நடவடிக்கை

மேற்கொள்ளப்படாத வழக்குகளின் விவரம் என்பன போன்ற தகவல்களை வழங்குமாறு கோரியுள்ளார்.

2. பொதுத் தகவல் அலுவலரால் 10.07.2023 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது. மனுதாரர் 19.07.2023 தேதியிட்டு சட்டப்பிரிவு 19(1)ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பியுள்ளார். மேல்முறையீட்டு அலுவலரால் 26.07.2023 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது. அதனையடுத்து மனுதாரர் 25.10.2023 தேதியிட்டு சட்டப்பிரிவு 19(3)ன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அதனைப்பெற்ற ஆணையம் SA 18647/2023 ஆக பதிவு செய்து, மேற்சொன்ன இரண்டாம் மேல் முறையீட்டு மனு குறித்து மனுதாரர் கோரியுள்ள தகவல்களை வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தால் அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதனடிப்படையில் 10.10.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக பொதுத் தகவல் அலுவலரால் ஆணையத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இந்த இரண்டாம் மேல் முறையீட்டு மனுவின்மீது காணொளிக்காட்சி வாயிலாக விசாரணை செய்யும்பொருட்டு, தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் 05.06.2025 தேதியிட்ட காணொளிக் காட்சி விசாரணைக்கு சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேரடியாக ஆஜராகுமாறு மனுதாரருக்கும், ஆணையத்தில் நேரடியாக ஆஜராகுமாறு தெரிவித்து பொதுத் தகவல் அலுவலருக்கும் ஆணையத்தால் விசாரணை அறிவிப்பு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

3. இன்று கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் வாயிலாக நடைபெற்ற காணொளிக் காட்சி விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திருமதி R. தனலட்சுமி, பொதுத் தகவல் அலுவலர் / மாவட்டபதிவாளர் (நிர்வாகம்), மாவட்ட பதிவாளர் அலுவலகம், சிதம்பரம் ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

4. இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரரின் 12.06.2023 தேதியிட்ட சட்டப்பிரிவு 6(1)ன் கீழான மனுவிற்கு 19.07.2023, 26.07.2023 மற்றும் 10.10.2024 ஆகிய தேதிகளிட்ட கடிதங்களின் வாயிலாக தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், தற்போது கூடுதல் விவரங்களுடன் 02.06.2025 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாகவும் மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், அத்தகவல்களை மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் துறையின் ஆதாரத்தினையும் விசாரணையின்போது ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். பொதுத் தகவல் அலுவலரால் அனுப்பப்பட்ட தகவல்கள் தனக்கு கிடைக்கப்பெற்றதாக மனுதாரரும் விசாரணையின்போது தெரிவித்தார். அதனை ஆணையம் ஏற்கிறது.

5. எனவே, மனுதாரர் கோரிய தகவல்கள் பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்டும், அத்தகவல்களை மனுதாரரும் பெற்றுக்கொண்டதாக விசாரணையின்போது தெரிவித்தநிலையில், **இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணை முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(முகம்மது ஷகீல் அ்ஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 18647/SCIC/2023</u>**

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்),
மாவட்ட பதிவாளர் அலுவலகம்,
சிதம்பரம்.

**<u>மனுதாரர்:-</u>**
திரு V. பாஸ்கர்,
த/பெ M. வேணுகோபால்,
எண்.3, திருவந்திபுரம் மெயின்ரோடு,
கூத்தப்பாக்கம், கடலூர் 607 002

Copy to: File TK/PS